Kanchipuram District

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

பகுதி - அ

20 x 1 = 20

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
   அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு ஆ) மொத்த கடனீந்தோர் கணக்கு
   இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு
2. கடனாளிகள் தொடக்க இருப்பு ₹30,000 ; பெற்ற ரொக்கம் ₹1,00,000 ; கடன் விற்பனை ₹90,000. கடனாளிகள் இறுதி இருப்பு
   அ) ₹30,000 ஆ) ₹1,30,000 இ) ₹40,000 ஈ) ₹20,000
3. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது
   அ) ஒரு சொத்து ஆ) ஒரு பொறுப்பு
   இ) ஒரு செலவு ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று
4. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
   அ) வருவாயின வரவு ஆ) முதலின வரவு
   இ) வருவாயினச் செலவு ஈ) முதலினச் செலவு
5. பின்வருவனவற்றில் எது இலாப நட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும்?
   அ) அலுவலகச் செலவுகள் ஆ) பணியாளர் ஊதியம்
   இ) கூட்டாளியின் ஊதியம் ஈ) வங்கிக்கடன் மீதான வட்டி
6. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக்கொள்ளும் போது, அந்த எடுப்புகளின் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
   அ) 5.5 மாதங்கள் ஆ) 6 மாதங்கள் இ) 12 மாதங்கள் ஈ) 6.5 மாதங்கள்
7. சராசரி இலாபம் ₹25,000 மற்றும் சாதாரண இலாபம் ₹15,000 ஆக இருக்கும்போது உயர் இலாபம்
   அ) ₹25,000 ஆ) ₹ 5,000 இ) ₹10,000 ஈ) ₹15,000
8. ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ₹1,00,000; சொத்துகள் ₹1,50,000 மற்றும் பொறுப்புகள் ₹80,000. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு
   அ) ₹40,000 ஆ) ₹70,000 இ) ₹1,00,000 ஈ) ₹30,000
9. மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது
   அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) செலவு ஈ) இவற்றுள் எதுவுமில்லை
10. பட்டியல் Iஐ மற்றும் பட்டியல் II உடன் ஒப்பீடு செய்து சரியான விடையை கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீட்டை பயன்படுத்தி தெரிவு செய்க.

| பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|
| i) தியாக விகிதம் | - | 1) முதலீட்டு மாறுபடும் நிதி |
| ii) பழைய இலாபப் பகிர்வு விகிதம் | - | 2) பகிர்ந்து தரா இலாபம் |
| iii) மறுமதிப்பீட்டு கணக்கு | - | 3) நற்பெயர் |
| iv) முதல் கணக்கு | - | 4) பதிவுறாப் பொறுப்பு |

குறியீடுகள்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 3 | 2 | 4 | 1 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 3 | 1 | 2 | 4 |

11. மறு மதிப்பீட்டின் போது பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது

அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) இலாபம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

12. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4:2:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B இன் புதிய இலாபப் பகிர்வு விகிதம்

அ) 4 : 3 ஆ) 3 : 4 இ) 2 : 1 ஈ) 1 : 2

13. முகமதிப்பை விட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு

அ) பத்திர முனைமக் கணக்கு ஆ) அழைப்பு முன்பணக் கணக்கு

இ) பங்கு முதல் கணக்கு ஈ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு

14. சரியான குறியீட்டைப் பயன்படுத்தி பொருத்தமான இணையை தேர்ந்தெடுக்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | குறை ஒட்டம் | - | i) | முன்கூட்டிச் செலுத்திய அழைப்பு பணம் |
| 2) | மிகை ஒட்டம் | - | ii) | வெளியிட்ட பங்குகளை விட அதிகமாக ஒப்பப்பட்டது |
| 3) | அழைப்பு நிலுவை | - | ii) | வெளியிட்ட பங்குகளை விட குறைவான ஒப்பம் |
| 4) | அழைப்பு முன்பணம் | - | iv) | செலுத்தப் பெறாத அழைப்பு பணம் |

| | (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| அ) | (i) | (ii) | (iii) | (iv) |
| ஆ) | (iv) | (iii) | (ii) | (i) |
| இ) | (iii) | (ii) | (iv) | (i) |
| ஈ) | (iii) | (iv) | (i) | (ii) |

15. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது

அ) பணம் சாரா தகவல்கள் ஆ) கடந்த கால தகவல்கள்

இ) குறுகியகால தகவல்கள் ஈ) நீண்டகால தகவல்கள்

16. நிதி என்னும் சொல் குறிப்பிடுவது

அ) நடப்புப் பொறுப்புகள் ஆ) நடைமுறை முதல்

இ) நிலைச் சொத்துக்கள் ஈ) நீண்டகாலச் சொத்துக்கள்

17. புற அக பொறுப்புக்கள் அளவிடுவது

அ) குறுகிய காலக் கடன் தீர்க்கும் திறன் ஆ) நீண்டகாலக் கடன் தீர்க்கும் திறன்

இ) இலாபம் ஈட்டும் திறன் ஈ) செயல்திறன்

18. நடப்புப் பொறுப்பு ₹40,000 ; நடப்புச் சொத்து ₹1,00,000 ; சரக்கிருப்பு ₹20,000 எனில் விரைவு விகிதம்

அ) 1 : 1 ஆ) 2.5 : 1 இ) 2 : 1 ஈ) 1 : 2

19. பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் கணக்கியல் அறிக்கையானது

அ) வழக்கமான கணக்கியல் அறிக்கை ஆ) குறிப்பிட்ட நோக்க அறிக்கை

இ) இருப்பாய்வு ஈ) இருப்புநிலைக் குறிப்பு

20. எதிர்ப்பதிவு சான்றாவணம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

அ) தலைமைப் பதிவு

ஆ) அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம்

இ) அறிக்கைகள்

ஈ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது

பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14

21. நிலை அறிக்கை என்றால் என்ன?

22. ஒரு சங்கத்தின் பின்வரும் விபரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டு சந்தா மூலம் பெற்ற வருமானத்தைக் கணக்கிடவும்.

| *விவரம்* | *1.1.2018 (₹)* | *31.12.2018(₹)* |
|---|---|---|
| பெற வேண்டிய சந்தா | 10,000 | 7,000 |
| முன்கூட்டிப் பெற்ற சந்தா | 3,000 | 5,000 |

2018 ஆம் ஆண்டில் பெற்ற சந்தா ₹1,50,000

23. கூட்டாளி ஒருவருக்கு முதல் மீது வட்டி அனுமதிக்க மேற்கொள்ளவேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகள் என்ன?

24. பின்வரும் விவரங்களிலிருந்து கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் காண்க.

| *ஆண்டு* | *முடிவு* | *தொகை* |
|---|---|---|
| 2015 | இலாபம் | 5,000 |
| 2016 | இலாபம் | 8,000 |
| 2017 | நட்டம் | 3,000 |
| 2018 | இலாபம் | 6,000 |

25. பின்வருவனவற்றுள் மறுமதிப்பீட்டுக் கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதைத் தரவும்.

அ) சொத்தின் மீதான தேய்மானம்

ஆ) பதிவுறாப் பொறுப்புகள்

இ) கொடுபட வேண்டிய செலவுக்கான ஒதுக்கீடு

ஈ) சொத்தின் மீதான மதிப்பேற்றம்

26. இறந்த கூட்டாளிக்குச் செலுத்தவேண்டிய தொகையினை அவருடைய நிறைவேற்றாளர் கணக்கிற்கு மாற்றுவதற்குரிய குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

27. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?

28. குமார் நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| *விவரம்* | *2017-18 (₹)* |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 |
| இதர வருமானம் | 20,000 |
| செலவுகள் | 3,00,000 |

29. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆனந்த் கட்டுமான நிறுவனத்தின் தகவல்களிலிருந்து, விரைவு விகிதத்தைக் கணக்கிடவும்.

| *விவரம்* | ₹ |
|---|---|
| மொத்த நடப்புப் பொறுப்புகள் | 1,00,000 |
| மொத்த நடப்புச் சொத்துகள் | 2,50,000 |
| சரக்கிருப்பு | 50,000 |
| முன்கூட்டிச் செலுத்திய செலவு | 15,000 |

30. ஏதேனும் ஐந்து கணக்கியல் அறிக்கைகள் கூறு.

பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) **7 x 3 = 21**

31. 2017 ஏப்ரல் 1 அன்று கணேஷ் ₹75,000 முதலுடன் தன்னுடைய தொழிலைத் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. 31.03.2018 ஆம் நாளைய அவருடைய ஏடுகளின் விவரங்கள் பின்வருமாறு :

| *விவரம்* | ₹ | *விவரம்* | ₹ |
|---|---|---|---|
| ரொக்கம் | 5,000 | கடனாளிகள் | 16,000 |
| சரக்கிருப்பு | 18,000 | கடனீந்தோர் | 9,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 7,000 | வங்கி ரொக்கம் | 24,000 |
| அறைகலன் | 3,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 6,000 |
| நிலம் மற்றும் கட்டிடம் | 30,000 | | |

32. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

33. அருண் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி கூட்டாண்மை ஒப்பாவணத்தைப்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 12% விதிக்கவேண்டும். டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு :

| *நாள்* | ₹ |
|---|---|
| மார்ச் 1 | 6,000 |
| ஜுன் 1 | 4,000 |
| செப்டம்பர் 1 | 5,000 |
| டிசம்பர் 1 | 2,000 |

34. நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.

35. சுரேஷ் மற்றும் தினேஷ் என்ற இரு கூட்டாளிகள் 3:2 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் இரமேஷ் என்பவரை கூட்டாளியாக சேர்த்தனர். சுரேஷ் என்பவர் தன் பங்கில் 1/5 பங்கும், தினேஷ் என்பவர் தன் பங்கில் 2/5 பங்கும் தியாகம் செய்கின்றனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

36. தியாக விகிதத்திற்கும், ஆதாய விதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

37. அனு நிறுமத்தால் ₹10 முகமதிப்பில் வெளியிடப்பட்ட நேர்மைப் பங்குகளில், தியாகு என்பவர் வைத்திருந்த ₹200 நேர்மைப் பங்குகளுக்கு இறுதி அழைப்புத் தொகையான ₹3 செலுத்தாத காரணத்தால், அவை ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. அப்பங்குகள் ₹6 வீதம் லக்ஷ்மனுக்கு மறுவெளியீடு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

38. ஒப்பீடு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகளை விளக்கவும்.

39. சானியா நிறுமத்தின் கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து சரக்கிருப்பு சுழற்சி விகிதம் மற்றும் சரக்கிருப்பு மாற்று காலத்தை கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 1,90,000 |
| அவ்வாண்டில் தொடக்க சரக்கு | 40,000 |
| அவ்வாண்டில் இறுதிச் சரக்கிருப்பு | 20,000 |
| அவ்வாண்டில் மேற்கொண்ட கொள்முதல் | 90,000 |
| உள்தூக்குக் கூலி | 10,000 |

40. கணினிமையக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்குக.

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) இராகேஷ் என்பவரின் பின்வரும் விவரங்களிலிருந்து 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | 31.3.2018 | 31.3.2019 |
|---|---|---|
| சரக்கிருப்பு | 2,20,000 | 1,60,000 |
| கடனாளிகள் | 5,30,000 | 6,40,000 |
| வங்கி ரொக்கம் | 60,000 | 10,000 |
| இயந்திரம் | 80,000 | 80,000 |
| பற்பல கடனீந்தோர் | 3,70,000 | 4,20,000 |

<u>பிற தகவல்கள் :</u>

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வாடகை செலுத்தியது | 1,20,000 | கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 12,50,000 |
| பெற்ற தள்ளுபடி | 35,000 | எடுப்புகள் | 1,00,000 |
| அளித்த தள்ளுபடி | 25,000 | ரொக்க விற்பனை | 20,000 |
| கடனீந்தோருக்கு ரொக்கம் | 11,00,000 | 1.4.2018 முதல் | 5,20,000 |

*(அல்லது)*

ஆ) கீழ்க்காணும் திருச்சி மனமகிழ் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | அறைகலன் வாங்கியது | 10,000 |
| கை ரொக்கம் | 11,000 | வாடகை | 2,800 |
| பங்காதாயம் பெற்றது | 27,600 | செயலர் மதிப்பூதியம் | 15,000 |
| பழைய செய்தித்தாள் விற்றது | 3,000 | தபால் செலவுகள் | 1,700 |
| உறுப்பினர் சந்தா | 31,000 | பொதுச் செலவுகள் | 4,350 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை | 8,000 | அச்சு மற்றும் எழுதுபொருள் | 45,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 1,250 | தணிக்கைக் கட்டணம் | 5,000 |
| அறைகலன் விற்றது | | இறுதி இருப்பு | |
| (ஏட்டு மதிப்பு ₹4,400) | 5,000 | கை ரொக்கம் | 3,000 |
| | **86,850** | | **86,850** |

42. அ) பின்வரும் தகவல்களிலிருந்து, பத்மினி மற்றும் பத்மா என்ற கூட்டாளிகளின் முதல் மாறுபடும் முதல் எனக்கொண்டு அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்க.

| விவரம் | பத்மினி (₹) | பத்மா (₹) |
|---|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று முதல் (வரவிருப்பு) | 5,00,000 | 4,00,000 |
| 2018 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 70,000 | 40,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 2,000 | 1,000 |
| 2018 ல் இலாபப்பங்கு | 52,000 | 40,000 |
| முதல் மீது வட்டி | 30,000 | 24,000 |
| ஊதியம் | 45,000 | Nil |
| கழிவு | Nil | 21,000 |

*(அல்லது)*

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

i) பயன்படுத்தப்பட்ட முதல் ₹4,00,000

ii) சாதாரண இலாப விகிதம் 10%

iii) இலாபம் 2016 : ₹62,000 ; 2017 : ₹61,000 மற்றும் 2018 : ₹63,000

43. அ) ஆனந்த் மற்றும் பாலு என்ற கூட்டாளிகள் முறையே 7:3 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 31 மார்ச் 2018 ஆம் நாளைய அவர்களது இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | நிலம் | 60,000 |
| ஆனந்த் | 50,000 | | சரக்கிருப்பு | 40,000 |
| பாலு | 30,000 | 80,000 | கடனாளிகள் | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | | 20,000 | கை ரொக்கம் | 10,000 |
| இலாபநட்டக் க/கு | | 30,000 | | |
| | | 1,30,000 | | 1,30,000 |

2018 ஏப்ரல் 1ஆம் நாளன்று அவர்கள் சந்துரு என்பவரை கீழ்காணும் சரிகட்டுதல் களுக்கு ஒப்புக்கொண்டு 1/4 பங்குகள் ₹20,000 முதலுடன் கூட்டாளியாக கூட்டாண்மையில் சேர்த்துக்கொண்டனர்.

i) சரக்கிருப்பு மதிப்பை ₹3,000 குறைப்பு

ii) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹2,000 உருவாக்குவது

iii) நிலத்தின் மதிப்பு ₹10,000 மதிப்பேற்றம் செய்வது

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் முதல் கணக்கினை கூட்டாளி சேர்ப்பிற்கு பின் தயாரிக்கவும்.

*(அல்லது)*

ஆ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்வதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள் யாவை?

44. அ) கவின், மதன் மற்றும் ரஞ்சித் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை முறையே 4:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, டிசம்பர் 31 அன்று கவின் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். விலகலுக்குப் பின் தேவையான சரிகட்டுதல் களைச் செய்த பிறகு அவருடைய முதல் கணக்கு ₹1,50,000 வரவிருப்பைக் காட்டியது. பின்வரும் நிலைகளில் பதியவேண்டிய குறிப்பேடுப் பதிவுகளைத் தரவும்.

i) விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகை உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

ii) விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகை உடனடியாக செலுத்தப்படவில்லை.

iii) ₹1,00,000 உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது. மீதித்தொகை இன்னும் செலுத்தப்பட உள்ளது.

*(அல்லது)*

ஆ) ஜனனி, ஜானகி மற்றும் ஜமுனா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாப இலாபங்கள் மற்றும் நட்டங்களை முறையே 3:3:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2017 டிசம்பர் 31 அன்று ஜானகி இறந்துவிட்டார். அவருக்குச் செலுத்த வேண்டிய தொகை ₹1,40,000 என வரவிருப்பைக் காட்டியது.

கீழ்க்கண்ட நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

i) செலுத்த வேண்டிய தொகை காசோலை மூலம் உடனடியாக செலுத்தப்பட்டது

ii) செலுத்த வேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை

iii) உடனடியாக ₹75,000 காசோலை மூலம் செலுத்தப்பட்டது. மீதித் தொகை இன்னும் செலுத்தப்பட வேண்டி உள்ளது.

45. அ) ஜான் நிறுமம் ₹10 மதிப்புள்ள 50,000 பங்குகளை விண்ணபத்தின் போது ₹4, ஒதுக்கீட்டின் போது ₹4 மற்றும் முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹2 என செலுத்தும் வகையில் பொதுமக்களுக்கு வெளியிட்டது. 65,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இயக்குனர்கள் 50,000 பங்குகளை விகித அளவு அடிப்படையில் ஒதுக்கீடு செய்யும். மிகுதியாகப் பெற்ற விண்ணப்பத் தொகையை ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்திக் கொள்ளவும் முடிவு செய்தனர். அனைத்துத் தொகைகளும் பெறப்பட்டன எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

*(அல்லது)*

ஆ) விஸ்வநாதன் அறைகலன் வரையறு நிறுமம் ஒன்று ₹10 வீதம் 20,000 நேர்மைப் பங்குகளை பங்கொன்றிற்கு ₹2 முனைமத்தில் வெளியிட அழைப்பு விடுத்தது.

₹2 விண்ணப்பத்தின் மீதும்

₹5 ஒதுக்கீட்டின் மீதும்

₹5 முதலாம் மற்றும் இறுதி அழைப்பு

மிகை ஒப்பமாக 30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன, கூடுதலாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் இயக்குனர்களால் நிராகரிக்கப்பட்டன. அனைத்துத் தொகையும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

46. அ) பின்வரும் விவரங்களிலிருந்து மேரி வரையறு நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| *விவரம்* | *2015-16 (₹)* | *2016-17 (₹)* |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,00,000 | 5,00,000 |
| இயக்கச் செலவுகள் | 2,00,000 | 1,80,000 |
| வருமான வரி | 20 | 50 |

*(அல்லது)*

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து கவிதா நிறுமத்தின் போக்கு விகிதங்கள் கணக்கிடவும்.

| *விவரம்* | *₹ ஆயிரங்களில்* | | |
|---|---|---|---|
| | *2015-16* | *2016-17* | *2017-18* |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 100 | 125 | 150 |
| இதர வருமானம் | 20 | 25 | 30 |
| செலவுகள் | 100 | 120 | 80 |
| வருமான வரி | 30% | 30% | 30% |

47. அ) பெரிக்ஸ்டன் நிறுமத்தின் பின்வரும் இலாப நட்ட அறிக்கையிலிருந்து
   i) மொத்த இலாப விகிதம்
   ii) நிகர லாப விகிதம்

| விவரம் | ₹ |
|---|---|
| I. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 24,00,000 |
| II. இதர வருமானம் | |
| முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானம் | 70,000 |
| III. மொத்த வருவாய் (I + II) | 24,70,000 |
| IV. செலவுகள் : | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 18,80,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | (–) 80,000 |
| பணியாளர் நலன்களுக்கான செலவுகள் | 2,90,000 |
| இதர செலவுகள் | 1,10,000 |
| வரி ஒதுக்கு | 30,000 |
| மொத்த செலவுகள் | 22,30,000 |
| V. அவ்வாண்டின் இலாபம் | 2,40,000 |

*(அல்லது)*

ஆ) Tally ERP-9 ல் இலாப நட்டக் கணக்கில் எவ்வாறு பார்வையிடுவது என்பதை விளக்கவும்.

*****